1968 ஆகஸ்ட் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. நடைமுறைக் கேள்வி.

ஒற்றிவைக்கப்பட்ட வினாக்களுக்கு விடையளித்தல்

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்சினை. இப்போது கேள்வி எண்கள் 61 முதல் 64 வரை எடுக்கப்பட்டது, விதிமுறைகளுக்குச் சரிதானா என்பது சந்தேகத்திற்கு இடமாக இருக்கின்றது. 37-வது விதிமுறையில், 'வினா கேட்கும் விதத்தையும், விடைகள் அளிக்கும் விதத்தையும் பேரவைத் தலைவர் முடிவு செய்வார்' என்று கூறுகிறது. ஆனால் விதி 35 (1) விதியில், 'ஒவ்வொரு நாள் கூட்டத்திலும் பட்டியலில் கண்டுள்ள வரிசைப்படி வினாக்கள் எடுத்துக்கொள்ளப்படும்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அமைச்சர்களுக்காக விதி 35 (5)-ல், 'பட்டியலில் சேர்க்கப்பட்ட வினாவை அமைச்சர் வேண்டினால், பேரவைத் தலைவர் பிறிதொரு நாளுக்குத் தள்ளிப் போடலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. விதி 37-ஐப் பொறுத்த வரையில்,

'Subject to the rules, questions shall be put and answers given in such manner as the Speaker may, in his discretion, determine.'

என்று இருக்கிறது. ஆகையால் விதிமுறைகளுக்குக் கட்டுப்பட்டுத்தான் சபாநாயகர் செய்ய முடியும். விதி 35 (1)-ல்

Starred questions entered in the list of questions for a day shall be called, if the time made available for questions permits, in the order in which they stand in the list. லிஸ்டிலே எப்படி இருக்கிறதோ அப்படித் தான் போட வேண்டும். அமைச்சர் விரும்பினால் வரிசை மாற்றிக் கேட்கலாம். அப்படி வினாக்களை ஒற்றி வைக்கும்படி அமைச்சர்கள் கேட்டுக் கொண்டால், அடுத்த நாள்தான் அந்த வினாவைக் கேட்கலாம். விதிமுறையில் அவ்வாறு கூறப்பட்டுள்ளது. அப்படியின்றி, வினா ஒற்றிவைக்கப்பட்ட நாளன்றே மீண்டும் வினாவைப் பட்டியலில் இடம் பெற வைக்கலாம் என்பது விதிமுறைக்குச் சரியாகப் பொருந்தி வரவில்லை. இப்போது நடந்தது விதிமுறைகளுக்குச் சரியானதல்ல. ஆகவே, இனிமேலாவது விதிமுறைகளுக்குட்பட்டு செயல்பட முடியுமா ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ன ?

திரு. சா. மெய்யப்பன் : தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு மாறாக நாம் நடந்து கொண்டிருக்கிறோம். சிலநேரங்களில் என்னால் 9 மணிக்கு வருவதற்கு முடியாமல் இருக்கிறது. ஒற்றி வைக்கப்பட்ட வினாக்கள் பின்னால்தான் எடுத்துக் கொள்ளப்படும் என்று

வரையறை செய்தால் உறுப்பினர்களுக்குக் கேள்வி கேட்பதற்கு வசதியாக இருக்கும். இப்பொழுது அமைச்சர் விரும்பினல் வினக்களை பிறிதொரு நாளைக்குத் தள்ளிப்போடப்படுவதைப் போல உறுப்பினர்களும் விரும்பினல் வினக்களைத் தள்ளிப் போடுவதற்கு விதிமுறை ஏதாவது பின்பற்றப்படுமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கனம் உறுப்பினர்கள் கொஞ்சம் நேரம் கழித்து வருவதற்கு எப்படி உரிமை இருக்கிறதோ, அப்படியே அமைச்சர்களுக்கும் எங்களுடைய வினக்களைத் தள்ளிப் போடுங்கள் என்று கேட்கும் உரிமை இருக்கிறது. பின்னல் தள்ளிப் போடுங்கள் என்று கேட்ட வினக்கள் ஒத்தி வைக்கப்பட்டு, அடுத்த கேள்வி கேட்பது முறையாக இருந்து வருகிறது.

திரு. சா. மெய்யப்பன் : தள்ளிப் போடப்படும் வினக்களை அடுத்த நாளைக்கு அல்லாமல் அன்றே மீண்டும் எடுத்துக் கொள்ளும் உரிமை சபாநாயகருக்கு எந்த விதிமுறைகளின்கீழ் தரப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்கு விதிமுறையில் இடம் இருக்கிறது. எந்த விதி என்பதை நான் நாளைக்குக் கூறுகிறேன்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கனம் அங்கத்தினர் எடுத்திருக்கும் பிரச்சினை சாதாரண பிரச்சினை அல்ல. விதி 35 (5)-ல்

"The Speaker, may, at the request of the concerned Minister postpone one or more questions entered in the list of questions for a day to a subsequent date." என்று இருக்கிறது. இதிலுள்ள பிரச்சினை என்னவென்றால், அமைச்சர்களின் வரிசைப்படி வினக்கள் வருகின்றன. முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய வினக்களைப் பின்னல் தள்ளிப் போடும்படி விருப்பப்படுவதாகத் தெரிகிறது. நாம் நமக்குள்ள சௌகரியத்தை உத்தேசித்து ஒரு அட்ஜஸ்ட்மெண்ட்செய்து கொள்கிறோம். முதலமைச்சர் அவர்களுடைய வினக்கள் வரும் நாளெல்லாம் நேரம் கழித்தே வரலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (சிரிப்பு)

3. ஒரு மணி நேர விவாதக் கோரிக்கை.
சீரணிக்கு எதிராகத் திரட்டப்படும் அணி.

THIRU K. VINAYAKAM : I wanted to put a supplementary question about "Prosperity Brigade", about which there was a question in the morning but you, Sir did not allow me to put my supplementary question. The Hon. Deputy Speaker was not willing to accede to my request. That matter is a very urgent and important matter of public importance. There are conflicting views about this brigade. When we were talking about 'Prosperity